Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 02, 2024

செவ்வாய்க்கிழமை ஜூலை 02, 2024 | ஒளி: 09 கதிர் 285 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



## தமிழ் அரசியலின் முதுசம் சரிந்தது

**பாராளுமன்றத்தில் புதனன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை இறுதி அஞ்லிசக்காக பூதவுடல் வைக்கப்படும்**

**அவரது சொந்த ஊரான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஞாயிறன்று இறுதி கிரியைகள் நடத்தப்படும்**

தமிழ் அரசியலின் முதுசம் என்றழைக்கப்படும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த பெரும் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன், ஜூன் 30ஆம் திகதி இரவு 11 மணியளவில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 91 ஆகும்.

உடல் நலக் குறைவு காரணமாக, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள், சொந்த ஊரான திருகோணமலையில், ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெறும்.

அன்னாரின் பூதவுடல், கொழும்பில் மலர்ச்சாலையில் செவ்வாய்க்கிழமை (02) அஞ்சலிக்காக வைக்கப்படும். புதன்கிழமை (03) பாராளுமன்றத்தில் வைக்கப்படும். அதன் பின்னர், சம்பந்தனின் உடல் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தொடர்ச்சி P2



## “கண்ணியத்துக்காக பாடுபட்டார்”

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தனது தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அவருடனான சந்திப்புகளில் இனிமையான தருணங்கள் எப்போதும் நினைவு கூறப்படும். அவர் இலங்கையில் வாழும் தமிழர்களின் அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், மற்றும் கண்ணியம் போன்றவைக்காக தொடர்ந்து பாடுபட்டார்” எனப் பதிவிட்டுள்ளார்.



## “அயராது பாடுபட்டார்”


இரா.சம்பந்தனின் மறைவிற்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளைக் குறைக்க ஒரு தேசியத் தலைவராக, அயராது பாடுபட்டார். அவரது இழப்பு நாடு முழுவதும் இரங்கல் தெரிவிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

## “தீர்க்கமான தலைவர்”

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கு தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன, தீர்க்கமான தலைவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



தன்னுடைய அரசியல் பாசறையை நன்கு அறிந்து பல தீர்மானங்களை எடுத்தார். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவேளையில், அதன் வகிபாகத்தை நன்கு வெளிப்படுத்தியது மட்டுமன்றி பாராளுமன்ற சம்பிரதாயங்களை நன்கறிந்த ஆளுமையாக்கத் தலைவர் என்றும் கூறயுள்ளார்.



## “கலங்கரை விளக்கமாகும்”

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கைக்குச் சேவையாற்றிய சம்பந்தனின் இழப்பிற்காக இரங்கல் தெரிவிக்கிறோம். அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைக்கான அவரது அர்ப்பணிப்பு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்..

அவரது நேர்மையான மற்றும் நியாயமான தலைமை எனக்கும் இன்னும் பலருக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். உண்மையில், இது ஒரு சகாப்தத்தின் முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளார்.



## “சகோதரத்துவத்துக்கு ஓர் இழப்பு”

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆர். சம்பந்தனின் மறைவுக்கு மஹிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டரில் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவர் ஒரு பழைய நண்பர் மற்றும் சக ஊழியர், நாங்கள் பல நாட்கள் பல்வேறு விடயங்களைப் பற்றி விவாதித்தோம். அவரது மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்திற்கு ஓர் இழப்பு மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இந்த சோகம் இழப்பை போக்கட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மண்ணெண்ணெய் விலை மாறவில்லை



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஜூன் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோல் 11 ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய சில்லறை விலை ரூ.344 ஆகும்.

ஒரு லீற்றர் 95 ஒக்டேன் பெற்றோல் 41 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய சில்லறை விலை ரூ.379 ரூபாயாகும். சூப்பர் டீசல் ஸ்டார் யூரோ 4 ஒரு லீட்டர் ரூ.22 ஆல் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய சில்லறை விலை ரூ.355 ஆகும்.

தொடர்ச்சி P2



## ஹிருணிக்காவின் மேன் முறையீடுக்கு திகதி குறிப்பு

முன்னாள் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு (மேன்முறையீட்டு நிலுவையில் உள்ளது) கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஜூலை 4ஆம் திகதிக்கு திங்கட்கிழமை (01) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 5.07 சதவீதத்தால் கட்டணம் குறைப்பு



பஸ் கட்டணம் 5.07 வீதத்தால் குறைக்கப்படவுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த விலை குறைப்பு திங்கட்கிழமை (01) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டஉள்ளது.

திங்கட்கிழமை (01) பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பதில் சட்டமா அதிபர்

பதில் சட்டமா அதிபராக சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், திங்கட்கிழமை (01) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



## “மக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம்”



நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான செயல்பாட்டில், நாட்டில் கட்டமைப்பு ரீதியாக எதிர்நோக்கி வரும் அனைத்து சிக்கல்களையும் சவால்களையும் கண்டறிந்து தீர்வு காண வேண்டும். இந்தப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால் நாட்டு மக்களுக்குப் பொய்களைக் கூறி ஏமாற்றக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும், இன்று நம் நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் சுமார் 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளோம். எனவே, இந்த மரணப் பொறியில் இருந்து வெளிவரக்கூடிய வழிமுறைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நாட்டை ஆள்பவர்கள் அனைவரும் எமது நாட்டின் தற்காலிக

தொடர்ச்சி P2

## தெற்கிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் 1,000 மில். ரூபாய் செலவில் அபிவிருத்தி

பாணந்துறை முதல் கிரிந்த வரையுள்ள 18 கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்குக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக அரசாங்கத்திடமிருந்து 1,000 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளார்

தென் மாகாணத்திலுள்ள கடற்றொழில் துறைமுகங்களுக்கு அமைச்சர், கடந்த 29ஆம் திகதி கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டதுடன் அத் துறைமுகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார் அதன் பொருட்டு உரிய அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் நிசாந்த விக்ரமசங்கவுக்கு ஆலோசனை வழங்கினார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



# தமிழ் அரசியலின் முதுசம் சரிந்தது

1977 முதல் 1983 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், 2015 செப்டெம்பர் 3 முதல் 2018 டிசம்பர் 18 வரை எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் மறைவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ உள்ளிட்ட தலைவர்கள் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ் நாட்டுத் தலைவர்கள் உள்ளிட்டோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். இலங்கையில் இருக்கும் ராஜதந்திரிகளும் தங்களுடைய இரங்கலை பதிவுசெய்துள்ளனர்.



## "ஒற்றுமைக்காக உழைத்தவர்"

இலங்கைக்குள் இணக்கமான, அமைதியான சமூகத்தை உருவாக்குவதற்காக உழைத்த மூத்த தமிழ் அரசியல்வாதியான ஆர்.சம்பந்தனின் மறைவு மிகுந்த கவலையளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் சம உரிமைகளுக்கான அவரது வாதங்கள் அனைத்து இலங்கை பிரஜைகளுக்குமான பரந்த மனித உரிமைகளை மேம்படுத்த உதவிபுரிந்ததுடன் ஒற்றுமையை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மண்ணெண்ணெய் விலை மாறவில்லை

இதேவேளை, லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் (ரூ. 317) மற்றும் லங்கா மண்ணெண்ணெய் (ரூ. 202) ஆகியவற்றின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்நிலையில், எரிபொருட்களை விநியோகிக்கும் ஏனைய நிறுவனங்களும், விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹிருணிக்காவின் மேன் முறையீடுக்கு திகதி குறிப்பு

டிஃபென்டர் வாகனத்தைப் பயன்படுத்தி இளைஞரைக் கடத்திச் சென்ற வழக்கில் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையைச் சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

இந்த பிணை மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஜூலை 4ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

தெமட்டகொடையில் டிஃபென்டர் வாகனத்தைப் பயன்படுத்தி இளைஞரான அமில பிரியங்கரவை கடத்தி, தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தல், விடுக்கப்பட்டமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகளில் ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றவாளியாகக் காணப்பட்டார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர இந்த வழக்கில் ஒன்பதாவது குற்றவாளி, மேலும் அவர் குற்றமற்றவர் என்று ஒப்புக்கொண்டதால் அவருக்கு எதிரான குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய விவாதம் ஒத்திவைப்பு: ஜனாதிபதி விசேட உரையாற்றுவார்



கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் கடன் வழங்கும் நாடுகளுடன் இலங்கை பாடுபட்ட உடன்படிக்கை மீதான விவாதம் பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (02) ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்க, திங்கட்கிழமை (01) கூடிய கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என பாராளுமன்றத் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சபையில் விசேட அறிக்கையொன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு மரியாதை செலுத்தும் முகமாகப் புதன்கிழமை அமர்வுகளை நடத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எம்.பிக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அவரது பூதவுடல் பாராளுமன்றத்திற்குப் புதன்கிழமை (03) கொண்டு வரப்படவுள்ளது.

## 5.07 சதவீதத்தால் கட்டணம் குறைப்பு

புதிய கட்டணத்திற்கமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 28 ரூபாவாகும். 2002ஆம் ஆண்டின் அமைச்சரவை பத்திரத்திற்கு அமைவாகத் தனியார் பஸ் சங்கங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் கீழ் ஜூலை மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## "மக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம்"

பொறுப்பாளர்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாட்டுக்காக உடன்படிக்கைகளை மேற்கொள்ளும்போது தன்னைப் பற்றியோ, தனது இருப்பைப் பற்றியோ, தனது அரசியல் பயணத்தைப் பற்றியோ சிந்திக்காமல், நாட்டைப் பற்றியே சிந்தித்துச் செயல்பட வேண்டும். ஆட்சியாளர் தன்னைப் பற்றிச் சிந்திக்காமல், நாட்டின் 220 இலட்சம் மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாட்டு மக்களை ஏமாற்றி மக்களை குறைமதிப்புக்குட்படுத்தும் காலம் முடிவுக்கு வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், களுத்தறை, பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 01 ஆம் திகதி இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், வங்குரோத்து என்பது கடனை செலுத்த முடியாத நிலையாகும். அதிலிருந்து விடுபட, கடனை செலுத்தும் நிலைக்கு வர வேண்டும். இதற்கு, வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் போது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் மறுசீரமைப்பு செயல்முறை முன்னெடுக்கப்பட வேண்டும். தேவையின்றிச் செய்யப் போனால், பிழைப்புக்கேற்பச் செய்யப் போனால், ஏனோ தானோ என்று செய்யப் போனால் நாட்டுக்கு நன்மை பயக்காத உடன்பாடே எட்டும்.

எனவே, நாட்டு மக்களின் உயிருடன் விளையாடக் கூடாது. பொய்யான விடயங்களை முன்வைத்து நாட்டு மக்களை அரசியல் ரீதியாக ஏமாற்றமடையச் செய்ய வேண்டாம்.

இந்த திட்டத்தில், நாம் வெளிப்படையாகவும், நேர்மையாகவும், மக்களுக்கு உண்மையை விளக்க வேண்டும். மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மற்றும் சவால்களைக் கையாள அனைவரும் கைகோர்த்து தியாகங்களைச் செய்ய வேண்டும். சமீபத்திய உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், உழைக்கும் மக்கள்தான் இந்த தியாகத்தைச் செய்தனர். அவர்களின் ஓய்வூதிய நிதியங்களில் வைப்பிலிடப்பட்ட நிதிகளை வெட்டி நாட்டின் பெரும் செல்வந்த தப்பினாரைப் பாதுகாத்தனர்.

பெரும் செல்வந்தர்களைப் பாதுகாப்பதற்காக நாட்டின் உழைக்கும் மக்களின் தோள்களில் சுமையை சுமத்துவது தவறானது.

முடிவெடுக்கும் அதிகாரிகள் நாடு குறித்து, நாட்டின் தேசிய நலன் குறித்து, குடிமக்களின் நலன் குறித்துச் சிந்திக்க வேண்டும். தற்சமயம் நாம் இலங்கையர்கள் என்ற கருத்தோட்டத்தில் இருக்கிறோம். ஒற்றுமையே நாட்டின் பலமும் வெற்றியுமாகும். சாதி, மதம், கட்சி பேதமின்றி நாட்டுக்காக உழைப்பதே நாட்டின் வெற்றியாகும். இனவாத, மதவாத பாதையை ஒருபோதும் பின்பற்றக் கூடாது.

தகனமா அடக்கமா என்ற பிரச்சினைகள் எழுந்த போது ஐக்கிய மக்கள் சக்தி சரியான நிலைப்பாட்டை எடுத்துச் சரியான இடத்திலிருந்து செயல்பட்டது. உலக சுகாதார ஸ்தாபனம் கூட இதற்கு ஆதரவாக நின்றபோது ஆட்சியாளர்கள் இன, மத பேதங்களைத் தூண்டி ஒற்றுமையைச் சீர்குலைத்தனர். ஒற்றுமையைச் சீர்குலைத்து அரசியல் பிழைப்புக்காகத் தவறான முடிவுகளை எடுத்தனர். இச்சந்தர்ப்பத்தில் தேசிய தலைவர்கள் எவரும் இதற்காகக் குரல் எழுப்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே அப்போது முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக முன்னின்றது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு சுட்டிக்காட்டினார்.

## வெற்றிடத்துக்கு சண்முகம் குகதாசன்

ஏ.எம்.கீத், ஏ.எச்.ஹஸ்பர்



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த இரா.சம்பந்தனின் வெற்றிடத்துக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை (16,170) பெற்ற சண்முகம் குகதாசனே பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் வெற்றிடம் தொடர்பில், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அறிவிக்கப்படும். அதன்பின்னர், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரினால் பெயர் குறிப்பிட்டு, கடிதமொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பெயர் அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர், வர்த்தமானியில் அப்பெயர் பிரசுரிக்கப்படும். அதன்பின்னர், புதிய உறுப்பினர், பாராளுமன்றத்தில் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்.

## தெற்கிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் 1,000 மில். ரூபாய் செலவில் அபிவிருத்தி

குறித்த துறைமுகங்களின் குறைபாடுகள் தொடர்பாகத் துறைமுக அபிவிருத்திக் குழுவும் அப்பகுதி கடற்றொழில் சமூகங்களும் பல்வேறு தடவை அமைச்சருக்கு சுட்டிக்காட்டியிருந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்வதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்தார்.

இத் துறைமுகங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்துக் கொண்டு வந்திருந்த நிலையில் அவரது ஆலோசனையின் பேரில் குறித்த அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்படுவதாகக் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

## பாட்டியை வன்புணர முயற்சி: பல்செட் இறுகியதால் மரணம்

பாட்டியைத் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றபோது, அப்பாட்டியின் போலியான பல்செட் கழன்று, தொண்டையில் இறுகியமையால் அப்பாட்டி பரிதாபமாக மரணமடைந்த சம்பவமொன்று பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

78 வயதான பாட்டியின் வீட்டுக்குள் சந்தேகநபர் திடீரென புகுந்துள்ளார். இதனைச் சற்றும் எதிர்பாராத அப்பாட்டி, கூச்சலிட்டு அயலவர்களை உதவிக்கு அழைக்க முயன்றுள்ளார். எனினும், பாட்டி சத்தம் போடுவதைத் தடுப்பதற்காக அவர், அப்பாட்டியின் வாயை அடைத்து இறுகப் பிடித்துள்ளார். அவரின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக அப்பாட்டி முண்டியுள்ளார். அப்போது, வாயிலிருந்த போலி பல்செட் கழன்று பாட்டியின் தொண்டைக் குழிக்குள் சென்றுள்ளது.



இதனால், கழுத்துடன் இறுகக் கட்டியணைத்துப் பிடித்திருந்த சந்தேகநபரின் கைகளிலேயே பாட்டி தொங்கிவிட்டாள். இதனைச் சற்றும் எதிர்பாராத நபர், அப்பாட்டியை அப்படியே விட்டுவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான தகவல்கள் கிடைத்ததன் பின்னர், அந்தப் பாட்டியின் சடலம், ஜூன் 27ஆம் திகதியன்று மீட்கப்பட்டுள்ளது.




# இந்திய இழுவை படகுகளுக்கு எதிர்ப்பு

■ பு.கஜிந்தன்

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்யக் கோரி யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புகளால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகம் முன்றலில் யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை திங்கட்கிழமை (01) முற்பகல் 11.30 மணியளவில் முன்னெடுத்தன.

யாழ்ப்பாணம் மருதடிச் சந்தியில் ஆரம்பித்த குறித்த போராட்டமானது, இந்தியத் துணைத் தூதரகம் முன்றலில் நிறைவுற்றது.

இதன்போது கடற்றொழில் அமைப்புகளால் இந்தியத் தூதருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் செல்லத்துரை நற்குணம் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சிறீ கந்தவேள் புனிதப் பிரகாஸ் ஆகியோர் அடங்கிய குழுவினரே மகஜரை கையளித்தனர்.

# பேருந்து விபத்தில் 20 பேர் காயம்



கொழும்பு - கண்டி வீதியில், வெவெல்தெனிய தேவாலயத்திற்கு அருகிலுள்ள வளைவில், இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வட்டுபிட்டிவல மற்றும் வரக்காபொல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தங்கொவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த உடஹமுல்ல டிப்போவிற்கு சொந்தமான பேருந்து ஒன்றும், கலென்பிந்துனுவெவயில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் காயமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன், விபத்தின் பின்னர் சாரதி ஒருவர் தப்பி ஓடியதாகக் கிடைக்கப்பெற்ற தகவல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாகக் கொழும்பு - கண்டி பிரதான வீதியில் சுமார் ஒரு மணித்தியாலம் வரை போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் பாலகி, சிறுவன் உட்பட எழுவர் காயம்

பண்டாரகம - களுத்துறை வீதியில் கல்துடே மரகஸ் சந்தியில், காரொன்றும் வேனொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு குழுவினரை ஏற்றிச் சென்ற வேனும், காரொன்றும் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 8 மாத குழந்தையும் 2 வயது ஆண் குழந்தையும் உள்ளடங்குவதாகவும் அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் காரின் சாரதி, அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

மேலும், ஒட்டுநருக்குச் சொந்தமானது என நம்பப்படும் ஒட்டுநர் உரிமம் அடங்கிய பணப்பையை மீட்டுள்ள பொலிஸார், சந்தேக நபரை தேடி வருகின்றனர்.



# யானை உயிரிழப்பு

■ தீஷான் அஹமட்

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள சிறிமங்களபுர பகுதியிலுள்ள வயல் ஒன்றில் யானையொன்று உயிரிழந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை(30) மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானையின் தோல் பகுதியில் காயமொன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த யானை எவ்வாறு உயிரிழந்தது என இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை சேருநுவர வனஜீவராசிகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# தீக்காயங்களுக்குள்ளான ஈ.பி.டி.பி. உறுப்பினர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் சந்தேகத்திற்கிடமான முறையில் தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 10 நாட்களாகச் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (30) உயிரிழந்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச நிர்வாக செயலாளரான பவானி என அழைக்கப்படும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சரவணபவானந்தன் சிவகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த 20ஆம் திகதி, தனது மீன் வாடியில் உறக்கத்தில் இருந்த போது திடீரென உடலில் தீப்பற்றிய நிலையில், அலறியபடி வெளியே ஓடி வந்துள்ளார். அப்போது அயலவர்கள் தீயினை அணைத்து, அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது இனம் தெரியாத நபர்கள், பெற்றோல் குண்டினை வீசி விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகப்படும் மருதங்கேணி பொலிஸார், அது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# புனிதத்தை பாதுகாக்க கோரி போராட்டம்




■ ஏ.எச்.ஹஸ்பர்

திருக்கோணேச்சர ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டமொன்று திருகோணமலை நகர சபைக்கு அண்மையில் உள்ள திருக்கோனேஸ்வர ஆலய பரிபாலன சபைக்கு முன்னால் திங்கட்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியார்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

திருக்கோணேஸ்வர ஆலய அண்மித்த கடைத் தொகுதியில் கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகியதையடுத்து, அதனை சீல் வைக்கச் சென்ற திருகோணமலை நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை கண்டித்தும், புனிதத் தன்மையைப் பாதுகாக்க அரசத்துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.



# தமிழக மீனவர்கள் 25 பேர் கைது

■ எம்.றொசாந்த்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 25 தமிழக கடற்றொழிலாளர்கள் திங்கட்கிழமை (01) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்-நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 4 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதான கடற்தொழிலாளர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# யாழில் போராட்டம்

■ எம்.றொசாந்த்

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழில் போராட்டமொன்று ,யாழ். மாவட்ட செயலகம் முன்பாக திங்கட்கிழமை (01) முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பெற்றோர் என பலரும் கொண்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வன்புணர்ந்து தலைமறைவாகி வன்புணர்ந்த மாமா கைதானார்

பாடசாலை மாணவியான 13 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (30) பிற்பகல் கைது செய்யப்பட்டதாக நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோர்டன்பிரிட்ஜ் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், இதற்கு முன்பு 9 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்து, சுமார் 10 வருட காலமாக அப்பகுதியை விட்டுத் தப்பிச் சென்று மாவனல்லை பிரதேசத்தில் வர்த்தகர் வேடமிட்டு தலைமறைவாக இருந்த நிலையில், நோர்டன்பிரிட்ஜ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தபட்டுள்ளார்.

அப்போது ஐந்து மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடுமையான பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், ஹட்டன் நீதவான் மற்றும் நீதிமன்றத்தின் உத்தரவில் கையொப்பமிடுவதற்காக கடந்த 30ஆம் திகதி காலை பொலிஸ் நிலையத்திற்கு வந்து, பிணையில் கையெழுத்திட்டதன் பின்னர் சகோதரியின் வீட்டுக்குச் சென்று சகோதரியின் மகளை பாலியல் வன்புணர்வு செய்து அப்பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் மீண்டும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) மற்றும் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**நெத்மின் டிரேடிங் (பீவீடீ) எல்டிடி**
பி வி 00303561
இல. 190/9, ஹொரன வீதி, கொட்டாவ, பன்னிபிடிய.

**கிரவுண்ட் வொ்த் ஹோம்ஸ் (பீவீடீ) எல்டிடி**
பி வி 00247148
தளம் 12, மாக ஒன், இல.200, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு – 05
கம்பனியின் புதிய பெயர்
கிரவுண்ட் வொ்த் ரியலடர்ஸ் (பீவீடீ) எல்டிடி

**கிரவுண்ட் வொ்த் லேண்ட்ஸ் (பீவீடீ) எல்டிடி**
பி வி 00247153
தளம் 12, மாக ஒன், இல.200, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு – 05
கம்பனியின் புதிய பெயர்
**கிரவுண்ட் வொ்த் லேண்ட்ஸ் (பீவீடீ) எல்டிடி**

**குரோ இன்வெஸ்ட்மென்ட் (பிரைவட்) லிமிட்டட்**
பி வி 00269577
இல. 85/24, ஜாவத்த கார்டன்ஸ், கொழும்பு 05.
கம்பனியின் புதிய பெயர்
ஈகே ப்ரொபர்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்

பணிப்பாளர்கள்

# அரசியல் முதுசமான ஐயா, அமரத்துவம் அடைந்தார்

இலங்கையின் தமிழ் அரசியலில் முதுசம் என பலராலும் நன்கறியப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஐயா, அமரத்துவம் அடைந்து விட்டார். தமிழ்த் தேசியத்துக்காக வாழ்ந்து, தனது மூச்சு இருக்கும் வரையிலும் இறுதி வரையிலும் போராடிய பெருந்தலைவர் ஆவார்.

சிறிது காலம் கடும் நோயுற்றிருந்த ஐயா, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (30) இரவு 11 மணியளவில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 91 ஆகும்.

உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டங்களிலும் நன்கறியப்பட்ட தமிழ்த் தலைவரான சம்பந்தன் ஐயா, தனது ஆளுமையின் கீழ் வடக்கு, கிழக்கு தமிழர்களை மட்டுமன்றி, தனது தலைமைக்குக் கீழிருந்த உறுப்பினர்கள், அங்கத்தவர்களையும் கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்த பெருந்தலைவர் என்றால் மிகையாகாது.

பாராளுமன்றத்தில் அரசியல் கொள்கை தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் ஐயாவுக்கு இருந்த மரியாதை சொல்லில் அடங்காது. ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கடும் மரியாதைக்கு உரியவராகவே மதிக்கப்பட்ட பெருந்தலைவர் ஆவார்.

பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும், குரல்கொடுக்கும் போதெல்லாம், தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கரிசனையில் கடுமையாக உழைத்தவர். தனது கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் உழைத்தவர்.

அதனால்தான் என்னவோ, ஐயா, சம்பந்தன் காலத்தில் அதாவது, அவர் உயிருடன் இருக்கையிலேயே அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்காவிடின், பெற்றுக்கொள்ளாவிடின் தீர்வு மிகக் கடினமானதாகவே இருக்குமென மூத்த சிங்களத் தலைவர்கள் சபையில் பேசியிருந்தமையை, இப்போதாவது ஞாபகத்தில் கொள்வது அவசியமாகும்.

அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியா, சர்வதேசத்துடன் அவர் கையாண்ட விதமும், அவருடைய பங்கும் அளப்பரியது. ஆயுதப் போராட்டம் மௌனித்ததன் பின்னர், அரசியல் யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட அவர், பேச்சுவார்த்தைகளின் ஊடாக அதுவும் அஹிம்சை வழியில் தீர்வை தேடினார். அதற்கு தானே முன்னின்று தலைமைத் தாங்கினார்.

1977 பாராளுமன்ற தேர்தலில், திருகோணமலை தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஐயா, அதே கூட்டணியின் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 1989இல் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

அதன்பின்னர், 2001,2004,2010,2015 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்களில், திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டு வெற்றியீட்டினார். 2015 செப்டெம்பர் 3இல் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சம்பந்தன் ஐயாவின், எதிர்க்கட்சித் தலைவருக்கான வகிபாகம் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலும், தென்னிலங்கை மக்களின் மனங்களை வென்ற தமிழ்த் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தவர். அவ்வாறான பல்முக ஆளுமைகளைக் கொண்ட அரசியல் முதுசமான ஐயாவின் வெற்றிடம், நிரப்பப்படாத வெற்றிடமாகவே இருக்குமென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதையும் நினைவுறுத்தி அவரது இழப்பால் துயருறும் அனைவருக்கும் தமிழ்மிரர் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# சம்பந்தனின் வெற்றிடம்

– மொஹமட் பாதுஷா

தான் சார்ந்த மக்களுக்காக ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அரசியல் ரீதியாகக் குரல் கொடுத்துக் கொண்டும், போராடிக் கொண்டும் இருந்த மூத்த தமிழ் தலைவர் இரா.சம்பந்தன் காலமாகியுள்ளார்.

எந்தவொரு நபரும், பொருளும் இருக்கும் போது அதன் பெறுமதி அவ்வளவாகத் தெரிவதில்லை. அது இல்லாத போதுதான் உணரப்படும் என்பார்கள்.

அதுபோலத்தான், சம்பந்தன் வாழ்ந்த காலத்தில் எத்தனை பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் பெற்றிருந்தாலும், வரலாறும், ஆழ அகலங்களும் அறிந்த அந்த மூத்த தலைவர் இல்லாமல் போன வெற்றிடத்தை இலங்கை அரசியல் உணரச் செய்யலாம்.

1950களில் தமிழரசுக் கட்சியின் ஊடாக செயற்பாட்டு அரசியலுக்குள் நுழைந்த இரா.சம்பந்தன்,1977இல் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவானார். அதன் பிறகு எதிர்க்கட்சி தலைவர் உட்பட கடைசி வரையும் பல பதவிகளை வகித்தார்.

குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுவப்பட்ட போது தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா இருந்தார். இருப்பினும்,வடக்கை மையமாகக் கொண்ட ஒரு கட்சியில் கிழக்கு தமிழர்களையும் உள்வாங்கியதான ஒரு தோற்றப்பாட்டை உருவாக்க வேண்டும் என்ற ஒரு உபாயத்தின் அடிப்படையிலோ என்னவோ திருமலையைச் சேர்ந்த இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். இது தமிழர் அரசியலில் ஒரு முக்கிய நகர்வாகும்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் காலத்தில் இணைந்து கொண்டு, தமிழ் ஆயுதக் குழுக்கள் இருந்த காலத்திலும், யுத்த காலத்திலும், யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாத இடத்திலிருந்த விரல் விட்டு எண்ணக்கூடிய அரசியல்வாதிகளுள் அமரர் இரா. சம்பந்தனும் ஒருவர் எனலாம்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம் போன்ற ஜாம்பவான்களின் வழித்தடத்தில் பயணித்தவர் என்று இரா.சம்பந்தனைக் கூறலாம். அந்த தாக்கம் அவரிடம் கடைசி வரையும் இருந்ததை உன்னிப்பாக நோக்குவோரால் அறிய முடியும்.

அதாவது, ஒப்பீட்டளவில் விவகாரங்களைப் பக்குவமாக அணுகும் ஒரு கலையை அவரது வயதும் அனுபவமும் கற்றுக் கொடுத்திருந்தது எனலாம். தமிழ்த் தேசிய பற்றாளர்களும் தீவிர செயற்பாட்டாளர்களும் சம்பந்தன் தமிழ்ச் சமூகத்திற்கு எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்று விமர்சனங்களை முன்வைத்ததுண்டு.

அவர் இந்த சமூகத்திற்கு தன்னாலான எதையாவது செய்தார் என்ற யதார்த்தத்தை மறந்து விட்டு, முதுமையும் நோயும் இயலாமையும் வாட்டிக் கொண்டிருந்த 90 வயதில் அவர் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் கவலைக்குரியவை. அவர், எம்.பி. பதவியை விட்டுத்தர வேண்டும் என்று கூட பகிரங்கமாகச் சொன்னார்கள்.

சம்பந்தன் தன் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அவர் தமிழ் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்ற பாணியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அற்பத்தனமானவை.

எழுபது வயதிற்குப் பிறகு சாதாரண ஒரு குடும்பத் தலைவனே வீட்டு வேலைகளைக் கூடச் செய்ய முடியாமல் முடங்கி விடுகின்ற ஒரு காலகட்டத்தில், 90 வயது வரை எம்.பியாக இருந்து கொண்டு ஏதாவது அடிப்படையில் இயங்கிக் கொண்டிருப்பது என்பது வாயால் சொல்வது போல இலகுவான காரியமல்ல.

குறிப்பாக, தான் மரணிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னரும் தேசிய பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்த அவர், இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வேண்டும் என்பதை உறுதிப்படத் தெரிவித்திருந்தார்.

இந்த அரசியல், இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்கள, முஸ்லிம் தலைவர்களுக்கு மட்டுமன்றி, ஏனைய தமிழ் தலைவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும். தமிழர்களின் பிரச்சினை மட்டுமே முக்கியமானது என்ற எண்ணத்தில் தீவிரமான அரசியலைச் செய்கின்ற கனிஷ்ட தமிழ் அரசியல்வாதிகள், மறைந்த சம்பந்தன் போன்றவர்களின் பக்குவத்தைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்துள்ளதுடன், தமிழரசுக் கட்சியும் பிளவுபட்டுள்ளது. சம்பந்தனின் இயலாமை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில்தான் இதுவெல்லாம் நடந்திருக்கின்றது.

ஆகவே, ஏதோ ஒரு அடிப்படையில் சம்பந்தன் தனது இயங்குதலைக் குறைத்துக் கொண்ட பிறகு, தமிழர் அரசியல் கூட்டுப் பலத்தை இழந்திருக்கின்றது என்றும் கூறலாம்.

இதற்கு முன்னர் இந்தப் பக்கத்தில் வெளியாகிய பல பத்திகளில் மூத்த தலைவர் இரா.சம்பந்தனை தொடர்புபடுத்தி சில விடயங்களை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

**“ சம்பந்தனின் மறைவு தமிழர் அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஒரு தேக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது ஒருபுறமிருக்க, இன உறவின் தொன்மை அறிந்த மூத்த தமிழ் அரசியல்வாதியான இவரின் மறைவு தமிழ் – முஸ்லிம் உறவின் எதிர்காலம் குறித்த கேள்விகளையும் விட்டுச் செல்கின்றது என்றும் கூறலாம்**

இந்த வயதிலும் சம்பந்தருக்கு இருந்த சமூகப் பற்றும் வேட்கையும். பக்குவமாகவும் யாரும் முகம் சுழிக்காத வகையிலும் விடயங்களைக் கையாளும் ஆளுமையும் வரலாற்று அறிவும் அவற்றுள் முக்கியமானவை எனலாம்.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு தமது சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய தெளிவான புரிதலும். நிலைமாறாத நிலைப்பாடும் இருப்பதில்லை. சம்பந்தனை விட 25 வயது குறைந்த முஸ்லிம் தலைவர்கள் கூட, சமூக விடயத்திற்காக சம்பந்தனின் அளவுக்குத் தைரியமாகத் தொடராகக் குரல் கொடுப்பதில்லை.

சம்பந்தன், தமிழர் பிரச்சினையை கருத்தியல் ரீதியாக முன்கொண்டு சென்ற அளவுக்கேனும் முஸ்லிம்களின் பிரச்சினையை முன்கொண்டு சென்ற தலைவர் ஒருவர் எம்.எச்.எம்.அஷ்ரபிற்குப் பிறகு கிடையாது என்றே கூறலாம்.

சம்பந்தனின் மறைவு தமிழர் அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஒரு தேக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது ஒருபுறமிருக்க, இன உறவின் தொன்மை அறிந்த மூத்த தமிழ் அரசியல்வாதியான இவரின் மறைவு தமிழ் - முஸ்லிம் உறவின் எதிர்காலம் குறித்த கேள்விகளையும் விட்டுச் செல்கின்றது என்றும் கூறலாம்.

தமிழ் - முஸ்லிம் உறவுக்கு ஒரு பெரும் வரலாற்றுப் பின்னணி இருக்கின்றது. அண்மைக் காலத்தில், இரு பக்கத்தில் உள்ள அரசியல்வாதிகளும், தமிழ் ஆயுதக் குழுக்களும் இதனை தமக்கு விரும்பியவாறு புனைந்து வைத்திருக்கின்றனர்.

நிஜக் கதை என்பது அப்பாவியான தமிழ், முஸ்லிம் தாத்தாக்களுக்குத் தெரியும். ஆனால், அது இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை.

முஸ்லிம்களின் விருப்பு வெறுப்புகளை எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதனாலேயே முஸ்லிம்களுக்கும் ஒரு உப தீர்வு கிட்ட வேண்டும் என்று தமிழரசுக் கட்சி அப்போதிலிருந்தே கூறி வருகின்றது.

அந்த வழியில் வந்தவர்களாகவே இரா. சம்பந்தன், போன்ற மூத்த தலைவர்களை நோக்க முடிகின்றது. தமது கருத்துக்கள் ஏனைய சமூகங்களைக் காயப்படுத்தி விடக் கூடாது என்று மிகக் கவனமாகப் பேசுகின்ற பக்குவத்தை லரவாற்று அறிவும் பக்குவமும் அவர்களுக்கு வழங்கியிருந்தது.

முஸ்லிம்கள் தமிழர் அரசியலோடு இணைந்து செயற்பட்டார்கள், ஆயுத போராட்டத்திற்குத் தார்மீக பங்களிப்புக்களை வழங்கினார்கள். ஆனால், புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களை முஸ்லிம்களை ஒடுக்கியாள தலைப்பட்ட பிறகுதான் முஸ்லிம்கள் இதனை எதிர்த்தார்கள். அதில் நியாயமுள்ளது என்பதை இவ்வாறான தமிழ் தலைவர்கள் அறிந்திருந்தனர்.

அதேபோன்று முஸ்லிம்களின் பங்களிப்பை, தமிழ் - முஸ்லிம் உறவின் கதையை அறிந்த இளம் தமிழ் தலைவர்கள் மிகக் குறைவு. அல்லது இளைய அரசியல்வாதிகள் அதனையெல்லாம் மறந்தே அரசியல் செய்கின்றனர். இதே நிலைதான் கிட்டத்தட்ட முஸ்லிம் சமூகத்திலும் உள்ளது.

இன உறவின் பின்னணி புது அரசியல்வாதிகளுக்கும் தெரியாது. இளம் தமிழ் இளைஞர்களைப் போல, இளைய தலைமுறை முஸ்லிம்களுக்கும் பழைய உறவு பற்றிய கதைகள் கடத்தப்படவில்லை என்றே கூறலாம். கடந்த 10, 15 வருட நிகழ்வுகளை வைத்துக் கொண்டுதான் எல்லா விடயங்களும் நோக்கப்படுகின்றது.

இப்படியான ஒரு காலகட்டத்தில்தான் இரா.சம்பந்தனை 91 வயதில் இழந்திருக்கின்றோம். அந்த வகையில் ஒரு மூத்த தமிழ் அரசியல்வாதியை மட்டுமன்றி, அரசாங்கங்கள், ஆட்சியாளர்கள், ஆயுத குழுக்கள், சமூகங்கள் செய்த சரி, பிழை எல்லாவற்றையும் நன்கு அறிந்து வைத்திருந்த ஒரு மூத்த பிரஜையையும் நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ் - முஸ்லிம் உறவின் தொன்மை என்ன, சிங்கள - தமிழ் உறவின் எல்லை என்ற வரலாற்றை அறிந்து அதனூடாக கடைசி வரையும் பக்குவமான ஒரு அரசியலைச் செய்த அமரர் சம்பந்தனின் வெற்றிடத்தை காலம் நிச்சயம் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் உணர்த்தும்.



## வாழ்வியல் தரிசனம்

நாங்கள் மிகச் சின்னச்சின்ன விடயங்களில், வெற்றிபெற்றாலே போதும், மிகவும் களிப்பு அடைகின்றோம். இத்தோடு நாங்கள் நின்றுவிடக்கூடாது.

தொடர்ந்து அதேவழியில் சற்று மேலோங்கி, விரிந்த பயணத்தில் மேல்நோக்கிச் செல்வீர்களாவீர். அப்பொழுது, நீங்களே உணராத மகா வல்லமையைப் பெற்றவர்களாவீர்.

உயர்நிலைக்கு வந்தவர்கள் உறங்குவதில்லை. சின்னத் தீப்பொறியின் வியாபகம், பெரும் தீயை உண்டுபண்ணிவிடுகின்றது. எனவே, மனம் என்பதுகூட, ஒரு தீவிர இயங்கு சக்தி என்பதை உணர்வீர்களாக.

நல்ல விடயங்களில் மட்டும் நாட்டம், நெஞ்சத்தைக் குடையும் அல்லது, சிந்தையைச் சிதைக்கும் எதையும் மூளைக்குள் செலுத்த வேண்டாம். அமைதியாகவும் நிதானமாகவும் செய்யவேண்டிய கருமங்களில் உண்மையாகவே, ஈடுபாட்டுடன் செய்தாலே போதும், நீங்கள் நவ மனிதன்தான்.

எந்தக் கவலைகளும் எமக்கு வேண்டாம். எப்படி வாழ்வை மகிழ்ச்சிகரமானதாக உருவாக்குவது என்பதிலேயே தீவிர கவனத்துடன் இருங்கள். உங்களுக்கு நீங்களே எஜமான்தான்.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வேலிகளை மீறி யானைகள் வருகை

முல்லைத்தீவு-ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி கிராமங்களில் யானை வேலிகளை மீறி யானைகள் கிராமங்களுக்குள் வருகை தருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் யானை வேலிகளை அகற்றி பாதைகள் உருவாக்குவதன் காரணமாக அப்பாதைகள் வழியாக யானைகள் குடிமனைகளுக்குள் வருகை தருவதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி, கிராமங்களில் முக்கிய இடங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளின் நெருக்கடி மிகுந்த கிராமங்களாக பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் விளங்குகின்றன. ஆகையால், அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உரியத் தீர்வினை பெற்றுத்தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்





# வாழ்க்கைச் சுருக்கம்

இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், முன்னாள் இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் தலைவரும் இராஜவரோதயம் சம்பந்தன் 5 பெப்ரவரி 1933இல் பிறந்தார்.

1977 முதல் 1983 வரையும் பின்னர் 2001 முதல் இறக்கும் வரையும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

2015 செப்டெம்பர் 3 முதல் 2018 டிசெம்பர் 18 வரை இவர் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சம்பந்தனின் தந்தை ஏ.இராஜவரோதயம் கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். சம்பந்தன் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார்.

பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

லீலாதேவி என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

சம்பந்தன் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆனார்.

1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி (தவிகூ) பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர். இலங்கை அரசியலமைப்பின் 6ஆவது திருத்தச் சட்டத்தின் படி, தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தன் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டெம்பர் 7இல் இழந்தார்.

> **ஐதேக ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இரண்டு முக்கிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தன. இதனால் 16 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 2015 செப்டெம்பர் 3இல் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**

1989 பாராளுமன்றத் தேர்தலில் சம்பந்தன் ஈஎன்டிஎல்எஃப்/ ஈபிஆர்எல்எஃப்/ டெலோ/தவிகூ கூட்டமைப்பின் வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார். கூட்டணியின் வேட்பாளர் எவரும் இம்மாவட்டத்தில் வெற்றி பெறவில்லை.

2001ஆம் ஆண்டில் தவிகூ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எஃப்), டெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) என்ற புதிய கூட்டணிக் கட்சி ஒன்றை ஆரம்பித்தனர்.

இக்கூட்டணிக்கு சம்பந்தன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அக்கட்சி தேர்தல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாத படியால் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டது. சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் பாராளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட சிறிது காலத்தில் விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்குச் சார்பாக தனது நிலைப்பாட்டினை முன்னெடுத்தது. இந்நிலைப்பாட்டுக்கு தவிகூ தலைவர் வி.ஆனந்தசங்கரி எதிர்ப்புத் தெரிவித்து கூட்டமைப்பில் இருந்து விலகினார். அத்துடன், 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருடன் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டனர். சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாராளுமன்றத் தேர்தல்களில் சம்பந்தன் திருகோணமலைத் தொகுதியில் இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2015 தேர்தலில் முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (ஐதேக), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐமசுகூ) ஆகியன முறையே 106, 95 இடங்களைக் கைப்பற்றியிருந்தன. ஐதேக ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இரண்டு முக்கிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தன. இதனால் 16 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 2015 செப்டெம்பர் 3இல் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



# சம்பந்தன் விட்டுச் செல்லும் இடைவெளி

■ லக்ஸ்மன்

தமிழர் அரசியலில் பல்வேறு விமர்சனங்களுக்குரியவராக பலராலும் பேசப்பட்டாலும், விமர்சிக்கப்பட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் மறைவு விரைவில் நிரப்பப்பட இடைவெளியையே ஏற்படுத்தியிருக்கிறது.

தான் தலைவராக இருந்த காலத்தில் கால ஓட்டத்திற்கு ஏற்ப தமிழர்களுக்காகத் தேசிய அரசியலை நடத்திச் சென்றார்.

தனக்குப் பிறகு தமிழரசுக் கட்சி மரபு விழுமியங்களுக்கேற்ப பொருத்தமானதொரு தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை தமிழர் அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்தியவராக சம்பந்தன் இருக்கிறார். அதே நேரத்தில், 2009 மேயுடன் யுத்தம் மௌனித்தபின் சர்வதேச உறவுகள், பூகோள அரசியல் யதார்த்தங்களைக் கருத்திலெடுத்து தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதாக அறிவித்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்குத் தயார் என பிரகடனப்படுத்திக் கொண்டார். அதற்காகவே தொடர்ந்தும் செயற்பட்டும் வந்தார்.

அதே நேரம், புலிகளின் காலத்தில் மோசமான தமிழ்- முஸ்லீம் உறவுகளை மேம்படுத்தும் வகையில், கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக நசீர் அகமட்டை நியமிப்பதற்கு ஆதரவு கொடுத்தார். அதனால், வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி முஸ்லிம்களுக்குத் தேவையற்ற வகையில் ஆதரவு வழங்குவதாக விமர்சனத்தினையும் சம்பாதித்துக் கொண்டது.

இருந்தாலும், தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகரித்தது என்றே கூறவேண்டும். இருப்பினும் கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலக விவகாரம் உள்ளிட்ட விடயங்களில் முஸ்லிம்கள் தங்கள் நிலையிலிருந்து இறங்கவில்லை என்பது வேறுகதை.

91 வயதான இராஜவரோதயம் சம்பந்தன் 5 பெப்ரவரி 1933இல் திருமலையில் பிறந்தார். சம்பந்தனின் தந்தை ஏ. இராஜவரோதயம் கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். இரா.சம்பந்தன் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி,மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று,இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

197ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன் முதலில் பாராளுமன்ற உறுப்பினரானார். 1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி (த.வி.கூ) பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தனர்.

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்தமைக்காகவும், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தன் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டெம்பர் 7இல் இழந்தார்

அதனையடுத்து 1989 பாராளுமன்றத் தேர்தலில் சம்பந்தன் ஈ.என்.டி.எல்.எப., ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி இணைந்த கூட்டமைப்பின் வேட்பாளராகத் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார். கூட்டணியின் வேட்பாளர் எவரும் இம்மாவட்டத்தில் வெற்றி பெறாமை காரணமாக அவருக்கு வாய்பின்றிப்போயிருந்தது.

அதன் பின்னர், 2001ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), டெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட வேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டது. அத் தேர்தலில் சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக மீண்டும் 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு 15,144 வாக்குகளைப்பெற்றுத் தெரிவானார். 1989இல் தமிழர் விடுதலைக் கூட்டணி 6,048 வாக்குகள் பெற்றுத் தோல்வியடைந்தார். 2001 பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு 40,110 வாக்குகள் பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

2004இல், இலங்கைத் தமிழரசுக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு 47,735 வாக்குகள் பெற்றார். 2010 பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டம் இலங்கைத் தமிழரசுக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு 24,488 வாக்குகளைப் பெற்றார். 2015 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு 33,834 வாக்குகள் பெற்றார்.

இறுதியாக 2020இல், இலங்கைத் தமிழரசுக் கட்சி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு 21,422 வாக்குகளைப்பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட சிறிது காலத்தில் விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்குச் சார்பாகத் தனது நிலைப்பாட்டினை முன்னெடுத்தது. இந்நிலைப்பாட்டுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வி.ஆனந்தசங்கரி எதிர்ப்புத் தெரிவித்து கூட்டமைப்பிலிருந்து விலகினார்.

அதன் காரணமாக, 2004ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருடன் அதன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு வி.ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தந்தை செல்வாவால் 1974களில் கிடப்பில் போடப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் இறுதிவரை அவரே செயற்பட்டார்.

2001, 2004, 2010,2015, 2020 பாராளுமன்றத் தேர்தல்களில் சம்பந்தன் திருகோணமலைத் தொகுதியிலிருந்து தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2020 தேர்தலில் சம்பந்தன் போட்டியிடமாட்டார் என்ற தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் இறுதி நேரத்தில் அவர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

2015இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐ.ம.சு.கூ) ஆகியன முறையே 106, 95 இடங்களைக் கைப்பற்றியிருந்தன.

ஐ.தே.க ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், அவ் இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன. இதனால் அத்தேர்தலில் 16 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்திலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியானது.

அதன் தலைவர் இரா.சம்பந்தன் 2015 செப்டெம்பர் 3இல் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நல்லாட்சி அரசாங்கம் என அழைக்கப்பட்ட அந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியாக இருந்தாலும் அரசாங்கத்தின் நல்லெண்ண முயற்சிகளுக்கு ஆதரவளித்து அரசியலமைப்பு திருத்தத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

இருப்பினும், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன பிரதமராக ரணில் விக்ரமசிங்க இருக்க, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார்.

அதனால் ஏற்பட்ட ஆட்சிக்குக் குழப்பத்தின்போது, தமிழரசுக் கட்சி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக நீதிமன்றம் வரை சென்று அவருக்கு மீண்டும் ஆட்சியைப் பெற்றுக் கொடுத்திருந்தது.

நாட்டில் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களின் பின்னும் அமையும் ஒவ்வொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கெதிரான முன்னெடுப்புகளை எடுக்கின்ற வேளைகளிலும் அதனை எதிர்கொள்கின்ற கட்சியாக யுத்தத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்பட்டது. அதனை வழிநடத்தியவர் சம்பந்தன் ஆவார்.

அதே போன்று, ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தீர்வு இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறான வேளைகளில் வெளியிடப்படும் வாக்குறுதிகள் நிறைவேறாமல் போனதும், நிராசையானதும் வரலாறுதான் அதனால் பல்வேறு விமர்சனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவரான சம்பந்தனும் எதிர் கொண்டிருக்கின்றனர்.

இறுதி நேரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சியின் ஒற்றுமைக்கும் எதனையும் செய்யமுடியாதவராக ஆகிப்போனார் என்றே சொல்லமுடியும்.

இப்போது, தமிழ்த் தேசிய அரசியலில் பெருந்தலைவர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தனும் சேர்ந்துகொண்டார். எவ்வாறானாலும், அசாத்தியமான காலங்களிலும் தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்திச் சென்றவர் என்றவகையில் அவர் விட்டுச் செல்லும் இடைவெளி நிரப்பல் சாத்தியப்படவேண்டும். தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் அதனால் நிறைவேறவும் வேண்டும்.

# ஐயாவுக்கு இரங்கல்...

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமான மறைந்த இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், சமூக பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தங்களுடைய இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

அன்னாரின் பூதவுடல், கொழும்பில் மலர்ச்சாலையில் செவ்வாய்க்கிழமை (02) அஞ்சலிக்காக வைக்கப்படும். புதன்கிழமை (03) பாராளுமன்றத்தில் வைக்கப்படும். அதன் பின்னர், சம்பந்தனின் உடல் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை (07) இறுதி கிரியைகள் நடத்தப்படும்.



## “நீதிக்காக வாழ்வை அர்ப்பணித்திருந்தார்”



இலங்கை தமிழ் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்தேன் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல தசாப்தகாலமாக எனக்கும் அவருக்கும் இடையில் நடைபெற்ற பல்வேறு சந்திப்புகள் மற்றும் உரையாடல்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்கின்றேன். இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் சமத்துவம், கௌரவம் மற்றும் நீதிக்கான போராட்டத்துக்காக அவர் தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்திருந்தார்.

அவரது குடும்பத்தினருக்கும் பிமானிகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

## “நீடித்த பாரம்பரியத்தை விட்டுச் சென்றது”



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வருத்தமடைகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். .

அவரது கொள்கைகளுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஒரு நீடித்த பாரம்பரியத்தை விட்டுச் சென்றது. இக்கட்டான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## “இலங்கை தேசத்திற்கே பேரிழப்பு”



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் வெளியிட்டுள்ளார்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கைஅரசியலில் சேவையாற்றிய இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின்  மறைவு வடக்கு, கிழக்கு தமிழர் மட்டுமல்லாமல் இலங்கை தேசத்திற்கே பேரிழப்பாகும்.

அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பு மிக்க பயணமும் அவருடைய நேர்மையான மற்றும் நியாயமான தலைமை எல்லா அரசியல்வாதிகளுக்கும் ஊக்கமளிக்கும். தமிழ் சமூகத்தின் அசைக்க முடியாத அரசியவாதியும் ஆளுமைமிக்க மனிதருமாவார். அவரின் மறைவு இலங்கை அரசியலில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## “ஆணிவேராக நோக்கப்படுபவர்”



இலங்கை அரசியலில் இருந்த மூத்த சிறுபான்மை தலைவர் இரா. சம்பந்தன் ஐயா காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தேன். தமிழ் மக்களின் ஆணிவேராக நோக்கப்படும் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் சட்டத்தரணி இரா.சம்பந்தன் அவர்கள் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானதாக அறிந்து மிகவும் கவலை அடைந்தேன் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

## “குரல் மௌனித்தது”



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான ராஜவரோதயம் சம்பந்தன் மறைவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஷ். க.பிமேச்சந்திரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சிமுறையை உருவாக்கி ஒன்றுபட்ட நாட்டிற்குள் அவர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடன் செயற்பட்டது மாத்திரமல்லாமல், ஒவ்வொரு சர்வதேச சமூகத்துடனான சந்திப்புகளிலும் ராஜதந்திர மட்ட சந்திப்புகளிலும் இதனை வலியுறுத்தி வந்தவர். அன்னாரின் குடும்பத்தினர், நண்பர்கள் உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## “கொள்கை வேறு, கோட்டை வேறு”



தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் இரா சம்பந்தன் அவர்கள் வயதில் எமக்கு மூத்தவர்,. கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் அரசியல் தளத்தில் எம்முடனும் சம காலத்தில் பயணித்தவர், முரண்பாடுகள் இருப்பினும் காணும் பொழுதுகளில் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுண்டு. வயது மூப்பின் காரணமாக அவர் மரணித்திருந்தாலும் அச்செய்தி  துயரை தந்து ள்ளது. அவரது இழப்பில் துயருறும் சகல ருக்கும் ஆறுதல் கூறுகின் றேன்.

அஞ்சலி மரியாதை என அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா தனது இரங்கல் செய்தியில் தெரிவித்தார்.

## “இழப்பு பெரிதும் உணரப்படும்”



இலங்கை தமிழரசு கட்சியின் பெரும் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவிற்கு முன்னாள் இராணுவ தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தனது எக்ஸ் பக்கத்தின் ஊடாக இரங்கலை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் “எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்.சம்பந்தன் மிகவும் மூத்த அரசியல்வாதி. அவரது இழப்பு பெரிதும் உணரப்படும்” என பதிவிட்டுள்ளார்.

## “ஒரு மாமனிதராவார்”



தமிழினத்தின் விடுதலைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த மூத்த அரசியல் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவுக்கு தொழிலாளர் தேசிய சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் சிரேஷ்ட அரசிய ல்வாதிகளில் ஒருவரான இரா. சம்பந்தன் அனைத்து இனத்தவராலும் மதிக்கப்பட்ட சர்வதேச ரீதியில் நன்கு அறியப்பட்ட ஒரு மாமனி தராவார். அமரர் அப்பாதுரை அமிர்தலிங்கத்துக்குப் பிறகு தமிழர் ஒருவர் எதிர்க்க ட்சித் தலைவராக பதவி வகித்த பெருமைக்குரியவர்.

மலையக மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் அரசியல் ரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தா ரினரதும் கட்சியினதும் துயரத்தில் பங்கு கொள்வ தோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

## “கண்ணியமான தலைவர்”



காலம் சென்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும்  திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் ஐயாவின் மரணச் செய்தி கேட்டு மிகவும் ஆழ்ந்த கவலை அடைகிறேன் என முன்னாள் அமைச்சரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சம்பந்தன் ஐயா 1989ஆம் ஆண்டு தொடக்கம் என்னோடு பாராளுமன்றத்தில் இருந்த ஒருவர் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு மட்டத்தில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுத் தந்தவர்.

அத்துடன் மூதூரில் விடுதலை புலிகள் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய போது அது தொடர்பில் இரண்டு மூன்று நாட்கள் அவரோடு தொடர்ச்சியாக கலந்துரையாடினோம்.

அவர் மிகவும் நீதியா கவும், நியாயமாக நடந்து கொள்கின்ற ஒருவர், நான் கிழக்கு மாகாணத்தில் அமைச்சராக, ஆளுநராக இருந்த காலப்பகுதியில் என்னுடைய முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவையும் வழங்கிய ஒருவர் என தெரிவித்துள்ளார்.

## “நல்லிணக்கத்துக்கு பேரிழப்பு”



தமிழரசுக் கட்சியின் தலைவரும் மூத்த தமிழ் அரசியல்வாதியுமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்கு மாத்திரமன்றி, நல்லிணக்கத்தை விரும்பும் அனைத்து இலங்கையர்களுக்கும் பேரிழப்பாகும் என்று வட மேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் எதிர்பார்ப்பின் பிரகாரம் உரிமை சார் அரசியல் போராட்டங்களில் கைகோர்த்துச் செயற்படுவதும், பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் நல்லிணக்க அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதுமே அன்னாருக்கு நாம் செய்யக்கூடிய உண்மையான அஞ்சலியாகும் என்றார்.

## “தூணாக இருந்தவர்”



இலங்கையின் நீண்டகால எம்.பி.க்களில் ஒருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீண்டகாலத் தலைவருமான ஆர்.சம்பந்தன் காலமானதைக் கேட்டு நான் மிகுந்த வருத்தமடைகிறேன் என நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர்  ஜீவன் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

6 தசாப்தங்களாக அரசியலில் ஈடுபட்டுள்ள அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானதில் இருந்து அதன் தூணாகவும், இலங்கை அரசியல் அரங்கில் ஒரு முக்கியஸ்தராகவும் இருந்து வருகிறார்.

இந்த கடினமான காலகட்டத்தை கடந்து செல்லும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடையட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## “அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும்”



தமிழ்த் தேசியப்பரப்பின் மூத்த அரசியல், சட்ட ஆளுமை தமிழ்த் தேசத்திலிருந்து தன்னை நிரந்தரமாக விடுவித்துக் கொண்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ இரா. சம்பந்தன் ஐயாவின்  இழப்பு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும். தனது சட்டத் தொழிலை தியாகம் செய்து தன்னை மக்கள் அரசியலில் ஈடுபடுத்திய பெருமகனார் ஆவார் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர் அங்கஜன் இராமநாதன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## “அயராது உழைத்தவர்”



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் கடந்த அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தி நின்றவரும் இலங்கைத் தமிழர் இனச் சிக்கலுக்கு தீர்வுக்கான அயராது உழைத்து வந்தவருமான  மாண்புமிகு இரா. சம்பந்தன் ஐயா இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி திருக்கோணமலை மாவட்ட தலைவர் க.ச.குகதாசன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஐயாவின்  பிரிவால் வாடும் அவரது மனைவி , மக்கள், மருமகள் ,பேரன் உள்ளிட்ட உற்றார் உறவினர் அனைவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் சார்பில் இரங்கலையும் துயர் பகிர்வினையும் தெரிவித்துக்  கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

## “உலகறிய சொன்னவர்”



தான் முதலில் ஓர் இலங்கையன். அப்புறம் தமிழன். ஆனால், சிங்கள பௌத்த இலங்கையன் அல்ல. சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற "பல்லின-பன்மொழி-பன்மத" இலங்கையன். பன்மைத்துவம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறிய சொன்னவர். அப்படி சொல்லி சிங்க கொடியையும் யாழ் மேடையில் தூக்கி காட்டியவர். அதற்காக தமிழ் தேசிய வாதிகளால் கடுமையாக விமர்சிக்க பட்டவர் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எல்லாவற்றையும் மீறி நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவை நம்பி இரண்டு வருடத்துக்கு குறையாமல், வழிகாட்டல் குழுவில் அமர்ந்து, புது அரசியலமைப்பை எழுதி முடிக்க பாடு பட்டவர். அதை நம்பி "தீபாவளிக்கு தீர்வு", "பொங்கலுக்கு தீர்வு" என்று கெடு கூறி அதற்காகவும் கடுமையாக விமர்சிக்கபட்டவர் என்றும் கூறியுள்ளார்.

## “ஈழத் தமிழர் வரலாற்றில் ஈடு செய்ய முடியாதது”



இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாதவரும், மறுக்க முடியாதவருமாகிய ஈழ தமிழ்ச் சமுகத்தின் மிகப்பெரும் தூணாகத் திகழ்ந்தவரும் ஆன, இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன்   காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தம் அடைந்தேன் என அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி (இ.பி.எஸ்) தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரின் அடுத்த தலைமுறை பாதுக்காப்பான வாழ்வியலை கட்டமைக்க, ஒரு சரியான அடித்தளத்தை அமைத்த தமிழின தலைவரான அவரது இழப்பு, ஈழத் தமிழர் வரலாற்றில் ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. அன்னாரது ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.


## “கவலை அடைகின்றேன்”



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம்  தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை பாராளு மன்றத்தை பிரதிநிதி த்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலம் சென்ற இரா. சம்பந்தன் காணப்படுகின்றார். இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மைக் கருதி அன்னார் செயற்பட்டார் என்றால்  மிகையாகாது. இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

## நம்பிக்கைக்குரிய தலைவர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவர்களின் மறைவில் நான் ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைகின்றேன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நீண்டகால நண்பரும், இலங்கையின் ஒரு முன் மாதிரியான மற்றும் நம்பிக்கைக்குரிய தலை வரும் ஆவார் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசம்

## உடைந்த பல்லால் அண்ணனை
# அடையாளம் கண்ட தங்கை

உத்தரப்பிரதேசத்தில் 18 ஆண்டுகளுக்கு முன்பு ரயில் பயணத்தில் காணாமல் போன தனது அண்ணனை, இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் மூலம் தங்கை ஒருவர் அடையாளம் கண்டுள்ளார். அதுவும் உடைந்த பல்லை வைத்து கண்டுபிடித்துள்ளார். உத்தரப்பிரதேசத்தில் கான்பூர் ஹாதிபூரை சேர்ந்தவர் ராஜ்குமாரி. இவர் இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் பார்ப்பதை வழக்கமாக வைத்துள்ளார். அப்படி ஒருநாள் இன்ஸ்டாகிராமில் ரீல்ஸில் வந்த ஒருமுகம், தனக்கு நன்கு தெரிந்ததை போல உணர்ந்துள்ளார்.

மேலும், அந்த ரீல்ஸில் வந்த நபருக்கு பல் ஒன்று உடைந்திருப்பதை கண்ட ராஜ்குமாரி, பார்ப்பதற்கு அது தன் அண்ணன் போல் இருப்பதாக சந்தேகித்துள்ளார்.

இந்நிலையில், தன் அண்ணன் போல கை விரல்களும் அந்நபருக்கு சற்று இறுக்கமாக இருந்ததை கவனித்த ராஜ்குமாரி, அந்நபர் பற்றி தீவிரமாக விசாரித்திருக்கிறார். அதன்முடிவில் 18 வருடங்களுக்கு முன்பு காணாமல் போன தனது அண்ணன் பால் கோவிந்த்தான் ரீல்ஸ் செய்தது என்பதை உறுதி செய்திருக்கிறார்.



முன்னதாக பால் கோவிந்த் 18 ஆண்டுகளுக்கு முன்பு மும்பைக்கு வேலைத் தேடி தனது நண்பர்களுடன் சென்றுள்ளார். அங்கே சென்றபோது தன் நண்பர்களிடமிருந்து தொலைந்த அவர், வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பணிகளை செய்து வந்துள்ளார். பிறகு, தனது வீட்டிற்கு செல்ல நினைத்து, கான்பூரில் ரயில் ஏறியிருக்கிறார். ஆனால், அவர் இறுதியில் சென்றடைந்ததோ ஜெய்ப்பூர்.

பிறகு அங்கிருந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர், இவருக்கு வேலை வாங்கி கொடுத்துள்ளார்.

மும்பை

## கிணற்று நீரால்
# 93 பேர் பாதிப்பு



மஹாராஷ்ட்டிராவில் கிணறொன்றிலிருந்து பெறப்பட்ட குடி நீர் அருந்திய 93 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருகையில், நந்தட் மாவட்டத்தில் முகுவான்தாண்டா என்ற கிராமத்தில் மொத்தம் 107 வீடுகள் உள்ளன. இங்கு, சுமார் 500 பேர் வசிக்கின்றனர். ஒரு கிணற்றிலிருந்து வந்த நீரை அப்பகுதியினர் பருகி வந்தனர்.

இந்நிலையில் பலருக்கு வயிற்றுவலி, வாந்திபேதி என பலர் பாதிக்கப்பட்ட நிலையில், 93 பேர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அதேசமயம், ஒரே கிராமத்தில் பலர் பாதிக்கப்பட்டதால் சுகாதாரத் துறையினர் அங்குச் சென்று மாற்றுக் குடிநீரை வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

சென்னை

## இரா.சம்பந்தன் மறைவுக்கு
# ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், எம்.பியுமான இரா.சம்பந்தன் மறைவுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின், இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். தமிழர்கள் மட்டுமல்லாது இலங்கை மக்கள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரின் மரியாதையைப்பெற்ற அரும் பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன்.

இறுதி மூச்சு வரையிலும் தமிழ் மக்களின் நலனுக்காக சிந்தித்தார், செயல்பட்டார். பாராளுமன்ற வாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமானதாக்கத்தைச் செலுத்தி வந்தன. தமிழ்மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் போராடிவந்தார்.

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச்சிறந்த நட்புறவை சம்பந்தன் பேணிவந்தார். கருணாநிதியின் நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பலமுறை அவரைச்சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

ஈழத் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்கத் தலைவராக விளங்கிய சம்பந்தனின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கைத் தமிழ மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ் நாளெல்லாம் குரல்கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தனை இழந்துதவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத்தமிழ் உறவுகளுக்கும் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

பெரிஸ்

## பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலால்
# வெடித்த வன்முறை



பிரான்ஸ் பாராளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து அதனை எதிர்க்கும் தரப்பினரால் தலைநகர் பெரிஸில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், வர்த்தக நிலையங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டமை மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

தீவிர இடதுசாரிகள் இஸ்லாமிய ஆதரவாளர்கள் உட்பட சமூகத்தின் பலதரப்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது வர்த்தக நிலையங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதைக் காண்பிக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறுகின்றன. பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் தீவிர வலதுசாரிகள் முன்னிலை பெற்றுள்ள அதேவேளை, தற்போதைய ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கட்சி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

மேலும், குடியேற்றவாசிகளிற்கு எதிரான ஆர்னன் கட்சி 33 வீத வாக்குகளை பெற்றுள்ள அதேவேளை, இடதுசாரிகூட்டணி 28 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது.

மேகியா

## சுவிட்ஸர்லாந்தில் வெள்ளம், மண்சரிவு:
# நால்வர் உயிரிழப்பு

சுவிட்ஸர்லாந்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவால் நால்வர் உயிரிழந்ததுடன், இரண்டு பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவிட்ஸர்லாந்தின் தெற்கே மேகியா பள்ளத்தாக்கு பகுதியில் கனமழையால் வெள்ளம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பல இடங்களில் மண்சரிவு சம்பவங்களும் ஏற்பட்டன. இதில் 3 பேர் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் வலாய்ஸ் கேன்டன் பொலிஸார் வெளியிட்ட செய்தியில், பின் என்ற கிராமத்தில் 52 வயது நபர் ஒருவர் காணாமல் போயுள்ளார். சாஸ்-கிரண்ட் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் நபர் உயிரிழந்துள்ளார். இதுதவிர லாவிஜாரா பகுதியில் ஒருவரும் வலாய்ஸ் கேன்டன் பகுதியில் மற்றொரு நபர் காணாமல் போயுள்ளனர். அதேவேளை, இத்தாலியிலும், வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## யூரோ:
# காலிறுதியில் இங்கிலாந்து-ஸ்பெய்ன்

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து, ஸ்பெய்ன் ஆகியன தகுதி பெற்றுள்ளன.





ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்ற ஸ்லோவாக்கியாவுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான சுற்றுப் போட்டியின் ஆரம்பத்திலேயே ஸ்லோவாக்கியாவின் இவான் ஸ்ரான்ஸ் பெற்ற கோலின் மூலம் பின்தங்கிய இங்கிலாந்து, இறுதி நிமிடத்தில் ஜூட் பெல்லிங்ஹாம் தலைக்கு மேலால் பெற்ற கோலின் மூலம் கோலெண்ணிக்கையைச் சமப்படுத்தி பின்னர் மேலதிக நேரத்தில் ஹரி கேன் பெற்ற கோலின் மூலம் 2-1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றது.

திங்கட்கிழமை (1) நடைபெற்ற ஜோர்ஜியாவுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வென்ற ஸ்பெய்ன் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. ஸ்பெய்ன் சார்பாக றொட்றி, பேபியன் ருய்ஸ், நிக்கோ வில்லியம்ஸ், டனி ஒல்மோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜோர்ஜியா சார்பாகப் பெறப்பட்ட கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.





## வடக்கு மாகாண வூசு போட்டிகள் நடத்தாமை தொடர்பாக
# வூசு வீரர்கள், வூசு சங்கத்தினர் அதிருப்தி

■ சண்முகம் தவசீலன்

வடக்கு மாகாண வூசு (WUSHU) போட்டிகள் நடத்தாமை திட்டமிட்ட பக்கச்சார்பான நடவடிக்கை என பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண வூசு வீரர்கள் மற்றும் மாவட்ட வூசு சங்கத்தினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்

வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கிடையே விளையாட்டு வீரர்களின் திறனை அதிகரித்தல், அனைத்து விளையாட்டிலும் சமனான விளையாடும் வீரரின் உரிமையைப் பேணுதல், தேசிய போட்டிகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் வெற்றிபெறுதல், இலக்கு நோக்கி நகர்தல் என்ற நோக்குடன் வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் வருடம் தோறும் அனைத்து குழு மற்றும் தனி நபர் விளையாட்டுக்கள் நடத்தப்படுகின்றன

அந்தவகையில் வட மாகாண அனைத்து விளையாட்டுகளும் இவ்வாண்டு முடிவுறும் நிலையில், வூசு விளையாட்டு நடத்தப்படவில்லை

வடமாகாண வீரர் கடந்த காலங்களில் மூன்றாண்டுகள் தொடர்ச்சியாகத் தேசிய பதக்கங்களைப் பெற்றும் இறுதியாண்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்ற நிலையில் இவ்வருடம் இலகுவாக வட மாகாணத்திற்குத் தேசிய பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகிறது

இவ்வாறான பின்னணியில் வூசு தேசிய போட்டியானது நாளை மற்றும் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிலையில் வூசு வடமாகாண போட்டியை இற்றைவரை வட மாகாணத்தில் நடத்தாமல் அசண்டையீனமாக உள்ளனர்

இதனால் வீரர்களின் விளையாடும் உரிமையை மறுப்பது தேசிய போட்டிக்குப் பங்குபற்றத் தகுதியாக வீரரை இனங்காண முயலாதது, அவர்களுக்கான தேசிய போட்டிக்கான பயிற்சி வழங்காதது , மாகாண போட்டிகளை நடந்தி மகாண மட்டத்திலான சான்றிதழ்களைப் பெறுவதன் மூலம் மாணவர்களின் கல்வி பல்கலைக்கழக வாய்ப்பு வேலைவாய்ப்புக்காகத் தகைமையை ஏற்படுத்த என விளையாட்டுத்துறை வளர்ச்சி செயற்பாட்டானது உள்ளமை தொடர்பில் வட மாகாண வூசு விளையாட்டு வீரர்களுக்கும் மாவட்டங்களின் வூசு சங்கத்தினரும் பொரும் அதிருப்தியை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்

இந்த விடயம் தொடர்பில் வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரைத் தொடர்புகொண்டு வினவியபோது குறித்த போட்டியை நடத்துமாறு பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கியதாகவும் போட்டி நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

## மாகாண மட்ட சதுரங்கப் போட்டிக்கு
# கற்பிட்டி அல் அக்ஸா மாணவர் 8 பேர் தெரிவு



■ எம்.யூ.எம்.சனூன்

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு இடையிலான புத்தளம் வலய சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் எட்டு மாணவ, மாணவியர் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற இப்போட்டியில் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம்.ஆத்திப், 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் எம்.எஸ்.எப்.சபீஹா இரண்டாமிடத்தையும், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம்.ஆதில் ஹசன் ஐந்தாமிடத்தையும், எம்.எம்.மயீஸ் அஹமட் ஏழாமிடத்தையும், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் எம்.ஆர்.ஆயிஷா மூன்றாமிடத்தையும், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம்.ஆஷிப் இரண்டாமிடத்தையும், எஸ்.டி. இத்தர்ஷனன் மூன்றாம் இடத்தையும், எம்.எஸ்.எம். சியாப் நான்காமிடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இம்மாணவர்களின் வெற்றிக்காக பாடுபட்ட ஆசியர்களான அன்பஸ், பைசல், றியாஜ் ஆசிரியைகளான சகீலா, ஹிசானா, அஸ்ரிபா, அமிறுன்நிசா ஆகியோருக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜினாஸ் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 02 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.